கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 15.04.2025 அ.வ.எண் . 404/2020, வா.சா.1. தட்சிணாமூர்த்தி, த/பெ.கந்தசாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) வாசா ஆ 7 ஆவணம் தாசில்தாரிடம் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 07.03.2013 தேதி உள்ளது என்றால் ஏற்கனவே கொடுத்த EP வழக்கிற்கு 07.03.2013 தேதியன்று வா சா ஆ 7 ஆவணத்தை தாசில்தார் கொடுத்தார். EP வழக்கின் எண் என்ன என்றால் தற்போது ஞாபகமில்லை, மேற்படி EP வழக்கில் நானும் எனது மனைவியும் தான் வாதிகள் என்றால் சரிதான். எனக்கு விவரங்கள் தெரியும் என்றும் வழக்கிற்காக ஞாபகமில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஒரு தலைமையாசிரியர் என்றும் அனைத்தும் ஞாபகம் இருக்கும் என்றும் வழக்கிற்காக ஞாபகமில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2) வா சா ஆ 7 ல் க.ச.எண். 935/ஏ என்று மட்டும் தான் உள்ளது என்றால் தமிழ்செல்வி, சரோஜினி, ராமாத்தாள் கிரயம் கொடுக்கும் போது க.ச.எண். 935/ஏ என்று தான் இருந்தது. கிரயம் கொடுத்த ஆவணத்தை வைத்து தான் வட்டாட்சியர் வா சா ஆ 7 ல் 935/ஏ என்று குறிப்பிட்டு கொடுத்தார் என்றால் சரிதான் ஆனால் பின்னிட்டு நான் மேல்முறையீடு செய்து 935/ ஏ 2 என்று பட்டா பெற்றுவிட்டேன். மேல்முறையீடு செய்து பட்டா பெற்றதாக கூறும் நிலையில் அந்த மேல்முறையீட்டின் மனு , உத்தரவு ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேல்முறையீடு செய்து உத்தரவு பெற்றுள்ளேன் என்று

ஒப்பம்/- (R.சுஜாதா)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

எனது பிராதிலோ, பிரமாண பத்திரிக்கையிலோ கூறியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை.

3) தமிழ்செல்வி, சரோஜினி, ராமாத்தாள் ஆகியோரிடம் கிரயம் பெற்ற க.ச.எண்.935/ஏ வை 935/ ஏ 2 என்று மாற்றுவதற்கு எனக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் மேல்முறையீடு பெற்று க.ச.எண். 935/ஏ 2 பெற்றிருந்தால் அவை போலியான ஆவணங்களின் அடிப்படையில் பெற்ற உத்தரவாகும் என்றால் சரியல்ல, போலியான ஆவணங்களை வைத்து க.ச.எண். 935/ஏ 2 பெற்றிருந்தால் என்மீது குற்ற நடவடிக்கை எடுப்பதற்கு இந்த பிரதிவாதி தயாராக உள்ளார் என்றால் நான் போலி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. வா சா ஆ 7 ல் பத்திர எண் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் எந்த மனைப்பிரிவு என்று குறிப்பிடவில்லை என்றால் தாசில்தார் பதிவு செய்த ஆவணத்தை மட்டும் தான் வேண்டும் என்று கேட்டார்.

4) எனக்கு கிரயம் கொடுத்தவர்களின் முன் பாத்தியஸ்தர்களின் 935/ஏ என்பது 935/ஏ 1 என உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டதால் 935/ஏ என்று தாசில்தார் கொடுத்துள்ளார் என்றால் எனது முன் பாத்தியஸ்தர்களுக்கு 935/ ஏ என்றுதான் செட்டில் மெண்ட் படி வந்ததால் அவர்கள் அதன்படி எனக்கு கிரயம் கொடுத்தார்கள். வா சா ஆ 7 ல் பட்டா எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விவரத்தில் ஏ,பி அட்டவணை சொத்துவிவரங்களை நான் படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். உறுதிமொழி கொடுத்த

ஒப்பம்/- (R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

தேதி 21.12.2020 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து விவரத்தில் ஏ, பி அட்டவணை சொத்துக்களில் எந்த இடத்திலாவது க.ச.எண். 935/ ஏ 2 என்று குறிப்பிட்டு போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5) க.ச.எண். 935/ஏ - ல் நான் எத்தனை சைட்டுகள் வாங்கியுள்ளேன் என்றால் 5 சைட்டுகள் வாங்கியுள்ளேன். எனது பக்கத்து வீட்டை சேர்ந்த ராஜா, சுமதி என்பவரிடமிருந்து மனைப்பிரிவு கிரயம் பெற்றுள்ளேன் என்றால் இல்லை. 09.05.2014 ம் தேதி ஆனைமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு எண்.1970/2014 க.ச.எண். 935/ஏ வில் 316 சதுர அடி ராஜா, சுமதி என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ராஜா, சுமதி என்பவரிடமிருந்து 24.03.2011 ம் தேதியன்று ஆனைமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு எண்.1491/2011 க.ச.எண். 935/ஏ வில் 1867.25 சதுர அடி கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. ஆனால் எனக்கு கிரயம் கொடுத்த வாரிசுகளிடமிருந்து கிரயம் பெற்றுள்ளேன் அவர்கள் பெயர் ஞாபகமில்லை. கச.எண்.935/ஏ 1 மற்றும் ஏ 2 ல் இருந்த பிரச்சனை தெரியாமல் வாங்கிய 3 ம் நபர்களிடமிருந்து நான் குறைந்த விலைக்கு மனைப்பிரிவுகளை வாங்கி வருகிறேன் என்றால் சரியல்ல.

6) எனது சைட் எண். 34 என்றால் சரிதான். சங்கர் நகர் அங்கீகரிக்கப்பட்டதற்கான அனுமதி கடிதம் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் பஞ்சாயத்தில் அனுமதி பெற்றுதான் மனையிடமாக வாங்கினேன். மேற்படி சங்கர் நகர்

ஒப்பம்/- (R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

க.ச.எண்.935/ஏ என்றுதான் உள்ளது என்றால் சரிதான். EP வழக்கு எண். 25/2019 நிலுவையில் உள்ளதா என்றால் பிரதிவாதி இறந்துவிட்டதால் நான் திரும்ப பெற்றுக்கொண்டேன். எனது முன் பாத்தியஸ்தர்களுக்கு க.ச.எண்.935/ஏ சுவாதீனம் கொடுத்தது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி வாங்கினேன். அவ்வாறு நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வா சா ஆ 15 வரைபடம் ஆனைமலை பேரூராட்சியால் அங்கீகரிக்கப்பட்டது என்று உள்ளதா என்றால் சங்கர் நகருக்கு அங்கீகாரம் இல்லை. ஆனால் பஞ்சாயத்திடம் அங்கீகாரம் பெற்றுதான் மனையிடம் வாங்கினேன். மனை எண். 35 யாருடையது என்றால் அவர் பெயர் தெரியாது.

7) மனை எண். 36 ல் எவ்வளவு சதுர அடி கிரயம் பெற்றுள்ளேன் என்றால் பத்திரத்தை பார்த்தால் தெரியும். 36 மனை எண் எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்றால் பத்திரத்தை பார்த்தால் தெரியும். நான் குடியிருக்கும் வீடு, மனை எண்.36, 35, 34, 37 ஆகியவை க.ச.எண். 935/ஏ 2 ல் வருகிறது என்றால் சரிதான். க.ச.எண். 935/ஏ 2 வருவதற்கு உரிய ஆவணங்கள் என்னென்ன தாக்கல் செய்தேன் என்றால் ஏற்கனவே பெற்ற உரிமைச்சான்று மற்றும் பத்திரங்களை வைத்து வாங்கினேன். க.ச.எண். 935/ஏ 2 பாலசுப்பிரமணியத்திற்கு பாத்தியப்பட்டது என்றும் அவரிடம் இருந்து நான் ஏதேனும் ஒரு இடத்தை கிரயம் பெற்றுள்ளேனா என்றால் க.ச.எண். 935/ஏ 2 ல் பால சுப்பிரமணியத்திற்கு எவ்வித பாத்தியதையும் இல்லை. க.ச.எண். 935/ஏ, 939/ஏ ல் எவ்வளவு பூமி எனது முன்

ஒப்பம்/- (R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

பாத்தியஸ்தர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் 4 ஏக்கர் ஆகும்.

8) வா சா ஆ 1 ஆனது இறந்து போன 1 ம் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் என்றால் சரிதான். மேற்படி வா சா ஆ 1ல் 4 வது பக்கத்தில் 939 ஏ க்கு 1 ஏக்கர் 62 செண்ட் என்றுள்ளது என்றால் சரிதான். 935 ஏக்கு 2.38 செண்ட் என்றுள்ளது என்றால் சரிதான். அவை இரண்டும் சேர்த்து தான் 4 ஏக்கர் ஆகும். அது போக பாலசுப்பிரமணியத்திற்கு 3 ஏக்கர் 62 செண்ட் பாத்தியப்பட்டது என்றால் 939, 936 சேர்ந்தது தான் 3 ஏக்கர் 62 செண்ட் ஆகும். பேரூராட்சிக்கு எனது முன் பாத்தியஸ்தர்கள் ரோட்டை ஒப்படைத்தார்களா என்றால் நீதிமன்ற உத்தரவுப்படி மனைப்பிரிவில் குடியிருந்த அனைவரும் சேர்ந்து பேரூராட்சிக்கு ஒப்படைத்தோம். பேரூராட்சிக்கு எனது முன் பாத்தியஸ்தர்கள் ரோட்டை ஒப்படைத்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

9) நீதிமன்ற உத்தரவு உபயோகப்படுத்தவேண்டும் என்று தான் உள்ளது என்றும் பேரூராட்சிக்கு பாதையை ஒப்படைக்கும்படி எவ்வித உத்தரவும் இல்லை என்றால் சரியல்ல. 2013 ம் ஆண்டு உத்தரவுப்படி பாதையை அனுபவிக்க நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பெற்றுள்ளேன். தவறான தகவலை கொடுத்து நீதிமன்றத்திடமிருந்து முறையற்ற வகையில் மேற்படி உத்தரவை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/- (R.சுஜாதா)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி